# வவனியாவில் வங்கிகள் எதுவும் திறக்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா நகரிலுள்ள நான்கு வங்கிகளும் இதுவரை இயங்கத்தொடங்கவில்லை என்று தெரியவருகிறது.

பெரும்பான்மையான ஊழியர்கள் வேலைக்கு வராத காரணத்தினால் மேற்படி வங்கிகளில் அலுவல்கள் நடைபெறவில்லை.

வவுனியா நகரிலுள்ள அரச திணைக்களங்களின் அலுவலகங்களும் பூரணமாக இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை.

வவுனியா கச்சேரியிலுள்ள கட்டிடத்திலேயே வவுனியா தயால் அலுவலகம் தற்காலிகமாக இயங்குகிறத.

அரசாங்க ஊழியர்கள் தங்கு

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 1 ற:அவ்வல் பிறை: 23 இதழ்: 176

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-10-1990

## குடாநாடு பூராவும் சீ பிளேன் கண்காணிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று சீ பிளேன் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

காலை 9-00 மணிக்கு மருதனுமடத்திலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதியை நோக்கி ரோந்து சுற்றிய சீ பிளேன் நண்பகல் 1-30 மணியளயில் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் உட்பட குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் ரோந்து சுற்றிவந்தது. (86)

★ பலாலி பகுதியில்

# புலிகளின் கடும் தாக்குதலினல் மும்முனைகளில் படை வாபஸ்!

## வசாவிளானில் தொடர்ந்து மோதல்

(காங்கேசன்துறை)

**பலாலி பகுதியில் புலிகளின் கடும் தாக்குதலினல் படையினர் மும்முனைகளில் வாபஸ் பெற்று ஒரு முனையில் மட்டும் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் பலாலிமுகாமிலிருந்து மயிலிட்டி கிராமக்கோட்டடி. கட்டுவன், [குரும்பசிட்டி, வசாவிளான் ஆகிய 4 யுத்த முனைகளால் இராணுவம் வெளியேவர முயற்சித்தது.

4 முனைகளிலும் விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து 3 முனைகளிலும் பின்வாங்கிய இராணுவம் தமது நிலைகளையும் வாபஸ் பெற்றது.

வசாவிளானில் மட்டும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்று வருகிறது.

இராணுவத்துக்கு உதவியாக ஹெலிகொப்டர்கள், பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் ஆகியன கடும் தாக்குதலை மேற்கொண்டன. (86)

## யபழ். குடாவில் ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டின் பல பகுதிகளில் ஹெகொப்டரிலிருந்து பரவலாகத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹெலிகொப்டரிலிருதுந் வீதிகளில் செல்லும் வாகனங்களை கலைத்துக் கலைத்து தாக்குதல் நடத்துவதில் ஹெலிகொப்டர்கள் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

சாவகச்சேரி, யாழ். பருத்தித்துறைவீதி, மருதனுமடம்-காங்கேசன்துறை வீதி, மானிப்பாய், உரும்பிராய், இணுவில், கோண்டாவில். சுன்னுகம், கல்வியங்காடு, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் ஹெலிகளின் தாக்குதல் அதிகரித்துக் காணப்பட்டது (வி து86)

## ஒருகிலோ அரிசி 35 ரூபா

(வேலணை)

ஒரு கிலோ அரிசி 35 ரூபாவாக நயினதீவில் உள்ள புங்குடுதீவு நயினதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றில் விற்பனை செய்யப்படுகிறது: ஆனல் தனியார் விற்பனை நிலையத்தில் ஒருகிலோ 28 ரூபாவுக்கு குறைவாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

## புலிகளின் தாக்குதலினல் சிறிலங்கா படை பின்னடைவு

(காங்கேசன்துறை)

பலாலி இராணுமுகாம் பகுதியில் விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலால் அரசபடைகளின் தரப்பில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை பலாலி முகாமில் விமானங்கள், ஹெலிகள் இறங்கிச் செல்வதிலும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பலாலி இராணுவ முகாமின் சகல முனைகளிலும் விடுதலைப்புலிகள் மிகுந்த துணிகரமாக நின்று எதிர்தாக்குதல் மேற்கொண்டு வருகிறார்கள்.

[4-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பிலிருந்து பொத்துவிலுக்கு நேரடி பஸ் சேவை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பொத்துவிலுக்கான நேரடி பஸ்சேவை ஒன்று மத்திய போக்குவரத்துச் சபையால் நேற்றுமுன்

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலியில் ஷெல் தாக்குதல் ஒருவர் பலி; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் மரணமானர்: இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் இறந்தவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக மானிப்பாயில் உள்ள யாழ். போதனு வைத்தியசாலைச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சி. சிவசாந்தன் (வயது 19) நாவற்குழி, மா. தங்கராசா (வயது 37) மயிலிட்டி ஆகியோர் இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். (56)

## அதிபர் பதவி உயர்வு விரைவில் நியமனக் கடிதம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் முதலாந் தர, இரண்டாம் தர அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை. கல்விச் சேவை ஆணைக் குழு விரைவில் அனுப்பிவைக்கும்.

வடபகுதி தவிர்ந்த சகல

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிவு

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட சகலஇன மக்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்க நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற அமைச்சர் மட்டத்திலான மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு திருகோணமலை சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது. மாநாட்டில் அமைச்சர்கள் திரு. எம். எஸ். எம். அதிகாரி' திரு. ஜோன் அமரதுங்கா உட்பட அமைச்சின் செயலாளர்கள். பகுதித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## நேற்று 3-வது நாளாக விமானத் தாக்குதல்!

(காங்கேசன்துறை)

வலி.வடக்கில் நேற்று மூன்றுவது நாளாக விமானத் தாக்குதல், ஹெலித்தாக்குதல், ஷெல் தாக்குதல் என்பன தொடர்ந்து அரச படைகளினுல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் பலாலி விமான நிலையப் பக்கமாக கடுமையான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

காலை 6 மணியளவில் சீனத் தயாரிப்பான வை 12 ரக விமானம் கட்டுவன், தெல்லிப்பழை, மயிலிட்டி பகுதிகளில் குண்டுகளை வீசிச் சென்றது.

காலை 11 மணியளவில் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

## 35 கிலோ தங்கத்துடன் சென்னையில் ஒருவர் 'கைது

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் நேற்று வந்திறங்கிய பிரயாணி ஒருவரிடம் 35 கிலோ எடையுள்ள தங்கக்கட்டிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கோட்டையைவிட்டு வெளியேறியது

# இராணுவம் எடுத்த திடீர் முடிவென்பதை

# அங்கிருந்த ஆதாரங்கள் எடுத்துக் காட்டின!

### யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 3

யாழ்: கோட்டையின் சுற்றுமதில் சுவர் உயரம் 30 அடிக்குமேல் இருக்கும். அந்த மதில் சுவரின் மேற்பகுதி 16 அடி அகலம். இதன் அகழிப் பக்கம் 3 அடி கற்காளால் கட்டப்பட்டுள்ளது. இதே போல உள்பக்கத்திலும் 3 அடி கற்களால்கட்டப்பட்டுள்ளது. இதன் நடுவில் உள்ள சுவர் 8 அடிவரை மண் நிரப்பப்பட்டுள்ளது: இந்த எட்டடிப் பாதையில் பல மரங்கள் காணப்படுகிறது.

கோட்டைவாசல் பகுதியில் 30 அடிக்கு அப்பால் உள்ள மதில் பகுதியையே மக்கள் இடித்து வீழ்த்துவதில் ஈடுபட்டிருந்தனர். அகழிப்பகுதியில் மேலிருந்து கீழாக சுமார் 8 அடிவரை உடைக்கப்பட்டு உள்ளேயிருந்த மண்ணும் வெளியில் அகற்றப்பட்டு வருகிறது: இன்னும் 3 அடி அகலமான முப்பதடி உயரம் இடிக்கப்பட வேண்டும். இதே போல் உள்பகுதியிலும் 3 அடி சுவர் இடிக்கப்பட்டு நடுவில் போடப்பட்ட மண் வெளியேற்றப்பட வேண்டும். அதன் பினனர்தான் அதில் ஒரு பெரிய வழி ஏற்படும். தகர்க்கும் வேலை தொடர்ந்து நடைபெற்றுவருவதால்இன்னும்ஒரு வாரததிற்குள் அந்த வழி பிறந்துவிடும்.

### பெரியோரும் சிறியோரும்

மேற்பகுதியில் நாங்கள் ஒற்றையடிப்பாதையால் நடந்து சென்றபோது இந்த உடைக்கப்பட்ட பகுதி குறுக்கே வந்தது, நாங்கள் எட்டடிவரை கீழே இறங்கி பின் அடுத்த பகுதியில் ஏறிக்கொண்டோம் அதற்கு வசதியாக உடைந்த கற்கள் அடுக்கப்பட்டிருந்தது. பெரிய இரும்பு சட்டியினுல் மண்ணை மீட்டு வெளியில் கொட்டிக் கொண்டிருந்தனர்; சிலர்மண்வெட்டியில் மண்ணை வெட்டி அந்தச் சட்டியில் போட்டனர். சிலர் கற்களை அகற்றும் பணியினில் ஈடுபட்டிருந்தனர். பெரியோர்கள் இளைஞர்கள். சிறியவர்கள் எல்லோரும் இந்தப்பணியில் உற்சாகம் ததும்ப குதுகலத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

அந்த மதில் சுவருக்குள் போட்ட மண் வெண்நிறமாக இருந்தது. 300 ஆண்டுகளுக்கு மூன்னர் இந்த அகழியை ஆழமாக்கியபோது எடுத்த மண்ணையே மதில் கட்ட பாவித்திருக்கவேண்டும்.

இந்த மண்ணை எடுத்து பார்த்தபோது பழைய சம்பவம் ஒன்று ஞாபகம் வந்தது.

**கா. யோகநாதன்**

### சிறிமாவோ காலத்தில்

கோட்டை மதில் சுவர் மேல்பகுதியில் உள்ள அந்த 8 அடி நிலத்தில் சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் பயிர்ச் செய்கை இடம்பெற்றுள்ளது. சிறைக் கைதிகள் அந்த நிலத்தில் மரவள்ளி நட்டு, நீர் ஊற்றி வளர்த்தார்கள். ஜெயில்கார்ட் ஒருவரின் மேற்பார்வையில் இந்த உணவு உற்பத்து நடைபெற்றது. பின்னர் ஆட்சி மாறியதும் அம்முயற்சி கைவிடப்பட்டது.

நாங்கள் அப்பகுதியைக் கடந்து கடற்கரைப் பக்கமாக உள்ள முனைப்பகுதியை நோக்கிச் சென்றோம். அங்கும் இராணுவ சென்றிகள் காணப்பட்டன.

### மைசூர்ப் பருப்பு

ஒரு சென்றிக்குள் பார்த்த போது மைசூர்ப் பருப்பு, செத்தல் மிளகாய் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்தன. வயிற்றோட்டத்தின் போது உடல் உலர்வை நீக்கும் பானமான 'ஜீவனி' பக்கட்டுகளும் அங்கு காணம்பட்டன. சுகாதார அமைச்சுக்காக. மருந்துக் கூட்டுத்தாபனம் இதனைத் தயாரித்திருந்தது. கொழும்பிலிருந்து ஏராளமாக இராணுவத்தினருக்கு இந்த மருந்துகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவேண்டும். கோட்டைக்குள் மாதக்கணக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினுல் முடங்கிக் கிடந்த இராணுவத்தினருக்கு வைத்திய வசதி எதுவும் கிடையாது. அதனுல் இப்படியான மருந்துவகைகளை உடன்பாவனைக்கு வைத்திருக்கிருர்கள்:

கடற்கரையை நோக்கிய போது தீவுப்பகுதி தெளிவாகத் தெரிந்தது. பண்ணைப் பாலத்தில் இரு இடங்கள் உடைக்கப்பட்டிருந்தன. அதனுல் போக்குவரத்து அப்பாலத்தால் இடம்பெறவில்லை. உடைக்கப்பட்ட ஒரு பகுதிக்குக்கற்கள் போடப்பட்டிருந்தது.

கடலுக்கும், கோட்டைக்கும் நடுவில் வீதியிருந்தது. அந்த வீதி நடுவில் ஒரு அடிவரை உடைக்கப்பட்டு, வாகனப் போக்குவரத்துச் செய்யமுடியாமல் தடை செய்யப்பட்டிருந்தது. இராணுவத்தினர் தான் அந்த வீதியை உடைத்ததாக அறிந்து கொண்டோம்.

கோட்டை மேல் பகுதியிலிருந்தது உள்பகுதியை எட்டிப் பார்த்தேன். வாசலுக்கு அருகில் இருந்தபிரதிபொலிஸ்மா அதிபர் காரியாலயம்தரை மட்டமாகியிருந்தது. மைதானத்தில் வாகனங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டது. அதற்கு அப்பால் சிறைச்சாலை கூரைகளும் சிறைச்சாலை அதிபர் விடுதி கூரைகளும் புலிகளின் கடும் தாக்குதலால் சேதமடைந்திருந்தது. நான்கு ஐந்து பனை மரங்கள் நன்கு வளர்ந்து நின்றன

இதன் பின்னர் இரண்டு பிரிவாக சென்ற பத்திரிகையாளர் ஒன்ருக சேர்ந்து பயணத்தை தொடர்ந்தோம்.

நேரம் நண்பகல் ஒருமணியாகிவிட்டது. மீண்டும் தூரத்தில் ஹெலிவரும் சத்தம் கேட்டது. அருகில் இருந்த இராணுவத்தின் சென்றிக்குள் அத்தனை பத்திரிகையாளரும் சென்று விட்டோம். வாசலில் வழிகாட்டியாக வந்த போராளிகள், வானத்தை பார்த்தபடி நின்றனர்.

## உடைகள் உணவுப் பொருட்கள் சிதறிக் கிடந்தன

### ஹெலி தாக்குதல்

ஹெலி தூரத்தில் கிரனேட் வீச்சு நடத்தி தாக்குதலில் ஈடுபட்டு கொண்டிருந்தது குண்டுச்சத்தங்கள் தெளிவாக கேட்டது. 5 நிமிடத்தில் ஹெலி போய் விட்டதாக கூறியதால் வெளியில் வந்தோம்.

நிலத்தில் பல இடங்களில் மோட்டார் ஷெல் கவர்கள் காணப்பட்டன. தீப்பெட்டிகள் பல அரைகுறையாக பாவித்த நிலையில் அங்குமிங்குமாக சென்றிகளுக்குள் காணப்பட்டன. வழியில் கீழ் பகுதியில் பாரிய அரசமரம் எதிர்ப்பட்டது.

செப்டம்பர் 25ம் தேதி இராணுவத்தினரும் பொலிஸாரும் அவசர அவசரமாக ஓடித்தப்பியிருக்கவேண்டும் ஏனெனில் சில சென்றிக்குள் சூட்கேசுகள், கால்சட்டை சேட், சாரம், பெட்சீட் சிதறி கிடந்தன. மைசூர் பருப்பு மஞ்சள், கொத்தமல்லி, அவித்த நிலையில் ஒரு சட்டியில் சுண்டல் கடலை இப்படி மற்றும் பல பொருட்கள் காணப்பட்டது.

கோட்டையைவிட்டு குறிப்பிட்ட தேதியில் வெளியேறுவதற்கு முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டிருந்ததால், உடைகளையும் மற்றும் முக்கிய பொருட்களையும் அநாதரவாக விட்டுச்சென்றிருக்கமாட்டார்கள் இதிலிருந்து புலிகளின் பலத்த தாக்குதலை தாங்கமுடியாமல் இவர்கள் திடீரென வெளியேறியிருக்கிருர்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

அதுமட்டுமல்ல இரும்புப் பெட்டிகளையெல்லாம் அவசரத்தில் நிலத்தில் போட்டு உடைத்திருக்கிருர்கள். றேடியோ பாகங்கள், ரேப் றெக்கோடர்கள் எல்லாம் அங்குமிங்குமாக சிதறிக்கிடந்தன. துப்பாக்கிகளையெல்லாம் ஒரேஇடத்தில் போட்டு எரித்துள்ளார்கள். ஆனுல் துப்பாக்கி அடிப்பாகங்கள் எரியாத நிலையில் அரைகுறையாகக் காணப்பட்டது. இந்த எரிப்பு வேலைகள் அவசரத்தில் செய்யப்பட்டதாகும்.

இதனுல் இவர்கள் கோட்டையை விட்டு வெளியேறியது முன்கூட்டியே செய்த முடிவல்ல என்பதும் மேலிடத்தின் உத்தரவுப்படி இராணுவத்தினர் கோட்டையை விட்டு தாங்களாகவே வாபஸாக வில்லை என்பதும் தெளிவாக தெரிகிறது.

இன்னும் பாவிக்கக் கூடிய நுளம்பு வலைகள், வெள்ளிப் பாத்திரங்கள், சப்பாத்துக்கள், குளுக்கோஸ் பெட்டிகள் தேனீர் கோப்பைகள் இப்படிப்பல பொருட்கள் சென்றிகளில் காணப்பட்டன.

மேலிடத்தின் பணிப்பின்படி கோட்டையிலிருந்து நகருக்கு முன்னேறுவதுதான் அவர்கள் திட்டமாக இருந்தது: இதனுல்தான் மண்டைதீவிலிருந்து கோட்டைக்குவந்த புதிய இராணுவத்தினர் சிலர் இங்குள்ள நிலைமையை புரிந்து கொள்ளாது புலிகளின் பலத்தை அறிந்து கொள்ளாது 'தடைகளை உடைக்கிருேம்' என்று கூறிக்கொண்டு கோட்டை முன் வாசலால், வாகனங்களில் வெளியேறி புலிகளின் கடும் தாக்குதலுக்கு அத்தனைபேரும் பலியாகினுர்கள்.

மேலும் கோட்டை இராணுவத்தினர் ஆஸ்பத்திரியை நோக்கி முன்னேறுகிருர்கள் என்று வானெலி அடிக்கடி பிரசாரம் செய்துவந்தது. இதனுல் ஆஸ்பத்திரியை கைப்பற்றவேண்டும் என்பது அவர்கள் நோக்கமாக இருந்ததென்பது தெளிவாகின்றது.

### திடீர் முடிவு

ஆனுல் 25-ம் திகதி இரவு 9 மணிக்கு புலிகள் தாக்குதலை ஆரம்பித்தார்கள். தொடர்ந்து இரவு முழுவதும் தாக்குதல் நடைபெற்றது. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் கோட்டையை பயங்கரமாகத் தாக்கின இதனை தாங்கிக்கொள்ள முடியாத படையினர் வெளியேற வேண்டும் என்று திடீர் முடிவு எடுத்து இரவிரவாக உடுத்த உடையுடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டுகடற்கரை வாசலினுல் ஓடித்தப்பியிருக்கிருர்கள் என்பது அங்குள்ள நிலைமைகளை ஆராயந்து பார்த்தபோது தெளிவாகியது

### பண்ணைப் பக்கம்

இப்போதுநாங்கள்பண்ணைப் பால முனைபகுதியிலிருந்து கொட்டடிப் பக்கமாக உள்ள பகுதிக்கு திரும்பிவிட்டோம். இப்பகுதியை மேலேஉள்ள சென்றியிலிருந்து பார்வையிட்டேன்:

பண்ணை சந்தி முற்றவெளியில் கட்டப்பட்ட பஸ்தரிப்பு நிலையம் தபால் நிலையம் எல்லாம் தெரிந்தது.

(தொடரும்)

# இருள் சூழ்ந்த தீபாவளி!

கல கலப்பும் மகிழ்ச்சியும் நிறைந்து காணப்படும் தீபாவளிப் பண்டிகையான நேற்றைய தினம் அமைதியான முறையில் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

வீடுகள் உட்பட பல பெறுமதியான சொத்துக்களை இழந்து தவிக்கும் தமிழர்களுக்கு இம்முறை தீபாவளி ஒரு பண்டிகை நாளாக இருக்கவில்லை என்பதனை ஒவ்வொருவரின் இதயப்புலம்பல்ளும் எடுத்தியம்பின.

புத்தாடை அணிந்து பட்டாசு கொளுத்தி புதுப்பொலிவுடன் காணப்படும் இந்த நாள் ஒரு விதமான சோகமயமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

தீபாவளிப் பண்டிகையையொட்டி உறவினர், நண்பர்கள் யாபேரும் வாழ்த்து தெரிவிக்கும் வகையில் வாழ்த்து மடல்களை தபால்மூலம் பரிமாறிக் கொள்ளும் நிலை இம்முறையிருக்கவில்லை. தபால் சேவைகள் நடைபெருததாலும் கடைகளில் வாழ்த்து மடல் விற்பனை நடைபெருத காரணமாகவும் லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துவிட்டதால் அவர்களின் புதிய விலாசம் தெரியாததாலும் வாழ்த்துமடல்கள் அனுப்பப்படவில்லையாயினும் தீபாவளியைப் பற்றிய நினைப்பே யாரிடமும் இருந்ததாகத் தெரியவில்லை.

வழக்கமாக தீபாவளித் தினத்தன்று புதிய படங்களை வெளியிட்டு நள்ளிரவு காட்சிகளை காண்பிக்கும் திரையரங்கள் விமானத்தாக்குதலினுல் உருத்தெரியாமல் அழிந்துவிட்டதால் அப்பகுதிகளில் வழக்கமான கலகலப்பு எதுவும் காணப்படவில்லை.

பொருட்கள். உடுபிடவைகளின் விலையேற்றம் கடந்த நான்கு மாதமாக அனுபவித்த துன்பங்கள் போக்குவரத்தின்மை வங்கிகள்இயங்காமை உட்பட பல காரணங்களில் இன்றைய தீபாவளி சிறப்பாக அமையவில்லை.

நகரில் தீபாவளிக்காலத்தில் லட்சக்கணக்கான ரூபாய்களை லாபகரமாக ஈட்டிக் கொள்ளும்பிடவைக்கடைகள்எதுவும் இப்பொழுது இல்லை. இதனுல் நகரத் தெருவெதிலும் தீபாவளிப் பொருட்கள் வாங்குபவர்கள் எவரையும் காண முடியவில்லை. எனினும் நல்லூர், சுன்னுகம், சாவகச்சேரி போன்ற சில இடங்களில் பிடவைக் கடைகள் இயங்கிய போதிலும் ஒரு கொண்டாட்டத்திற்குரிய விதத்தில் உடுபிடவைகள் எதுவும் விற்பனையாகவில்லை.

ஒருசிலர் தீபாவளியின் போதுதான் பிடவைகள் எடுப்பது வழக்கம். அப்படியானவர்கள்கூட இம்முறை புத்தாடைகள் அணியமுடியாதிருந்தார்கள்.

மேற்குறிப்பிட்ட இடங்களிலுள்ள சிலகடைகளில் கடந்த மூன்றுநாட்களாக மக்கள் நடமாட்டம் அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பலர் தமக்கு பிடவைகள் எடுப்பதைவிட சின்னக்குழந்தைகளுக்கு உடுப்புகள் எடுப்பதனை அவதானிக்கமுடிந்தது.

இந்தக்கொண்டாட்டம் இம்முறை சிறப்பாக அமையாததற்கு காரணம் குடாநாட்டில் பணப்புழக்கமின்மையே பிரதான காரணமாக இருக்கிறது.

வெளிநாட்டு ட்ராப்டுகள், காசோலைகள் பலரிடமிருந்தாலும் அவற்றை காசாகமாற்ற முடியாமையினுல் வசதியானவர்களின் கைகளில்கூட இன்னும் பணப்புழக்கமில்லை:

நகர்ப்புறத்தைதவிர கிராமப்புறங்களில் அமைதியான முறையில் தீபாவளி கொண்டாடப்பட்டது.

நூற்றுக்கணக்கான கிடாய் ஆடுகள் நேற்று குடாநாட்டின் பலபகுதிகளிலும் வெட்டப்பட்டது.

இந்தக்கிடாய் ஆடுகள் செவ்வாய் மாலையே வெட்டுவதற்கான நிலையில் தயார்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

புத்தாடை அணியாவிட்டாலும் ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடத்திய பலர் நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். பெண்களே இவ்வாருன பிரார்த்தனையில் கூடுதலாக ஈடுபட்டார்கள்;

எது எப்படியிருந்தாலும் இந்தமுறை தீபாவளி ஒரு இருள் சூழ்ந்த தீபாவளியாக இருந்தது.

- என். கே. ரி.

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது,

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும்

# மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகள்

தமிழீழ மக்களே!

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

★ இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

★ நாவல் ★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரை ★ சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

★ தமிழீழ மக்கள் எவரும் கலந்துகொள்ளலாம்.

★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினதும் மக்களதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும், இதயதாகத்தையும் பிரதிபலித்தல்வேண்டும்.

★ சுவரொட்டிக்கான கருப்பொருள்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.

★ இலக்கியப் படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்குக் மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ சுவரொட்டிகள் யாவும் 'ஆர்ட்போட்' டில் 60 cm x 40 cm அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகப் படுத்தப்படலாம்) கறுப்பு வெள்ளைப்படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப்படைப்புத்தான் என்பது உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.

★ போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 25-10-1990.
அனைத்து ஆக்கங்களும் 'ஈழநாடு'' அலுவலகத்திற்கே குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

★ தகுதிவாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
(1) சிறுகதை (2) கவிதை (3) கட்டுரை (4) ஓவியம்

★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஓவியங்கள் 18'' x 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்:
1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
5. ''போராடுவதற்காகக் கற்போம்''.

★ மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.
15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவு
15—17 வயதிற்கிடைப்பட்டோர் மத்தியபிரிவு
17 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்,

---

கிரிக்கெட்

## பாகிஸ்தான் வெற்றி

(கராச்சி)

பாகிஸ்தானுக்கும், நியூஸிலாந்துக்குமிடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் இன்னிங்ஸ் வித்தியாசத்தாலும் 43 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. (வி)

## ராஜினமா

(சண்டிகார்)

சீக்கிய அகாலிதள் மான் பிரிவு லோக்சபை உறுப்பினர் மான் தமது லோக்சபை உறுப்பினர்பதவியை ராஜினமாச் செய்துள்ளார். ரான்கார் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இவர் இதுவரை பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைவாக சத்தியப் பிரமாணம் செய்யவில்லை பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சி நீடுக்கப்பட்டிருப்பதை எதிர்த்தே இவர் பதவி விலகியுள்ளார். (ச)

## அலுவலகங்கள் திறக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பருத்தித்துறை வட்டவைப் பகுதியிலுள்ள 35 சிற்றூரவைகளுக்கும் 35 சிற்றூர்வை அலுவலகங்கள் திறந்துவைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை வட்டவைத் தலைவர் திரு. கோ. கருணனந்தராசா மேற்கொண்டுள்ளார். [52]

## கந்தஷ்டி விரத ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி கந்தஷஷ்டி விரத காலமாகிய நாளை 19-ம் தேதி காலை 8 மணி முதல 25ம் தேதி வரை ஒரு வார காலத்திற்கு ஒவ்வொருஆலய சூழலையும் தூய்மைப்படுத்தி திருநந்தவனம் அமைக்குமாறு சகல இந்து இளைஞர் மன்றங்களையும் சைவசமய நிறுவனங்களையும், ஆலயபரிபாலன சபைகளையும் கேட்டுள்ளது. (153)

## பழைய இடத்தில் சுகாதார கந்தோர்

(பண்டத்தரிப்பு)

தற்போது கோண்டாவிலில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவரும் யாழ். பிரதேச சுகாதார சேவை பணிப்பாளரின் அலுஉலகத்தின் ஒரு பகுதி மீண்டும் யாழ். நகரில் விக்ரோறியா வீதியிலுள்ள முன்னைய அலுவலக கட்டிடத்திற்கு கடந்த வாரம் தொடக்கம் இடமாற்றய் செய்யப்பட்டுள்ளது. களஞ்சியப்பகுதி, கடன்வழங்கும் பிரிவு ஆகியன அங்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. (72)

## நியமனமும் பதவியுயர்வும்

(பருத்தித்துறை)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய திரு. வி. வீரபத்திர பிள்ளை உடுவில் பிரிவு உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்று பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி திரு. எம். ஞானநேசன் உதவி அரசாங்க அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிய திரு. ரீ. சந்திரசேகரம் இளைப்பாறியுள்ளார். [52]

---

# வெள்ளி உலோகத்தில் வைத்திய உபகரணங்கள்

(லண்டன்)

வைத்திய உபகரணங்களை வெள்ளி உலோகத்தில் செய்வதன்மூலம் விஷக்கிருமிகளின் தாக்கத்தை பெருமளவுகட்டுப்படுத்தலாமென லண்டனில் நடைபெற்ற ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

நோயாளிகளை குணப்படுத்துப்போது அவர்களுக்கு பொருத்தப்படும் சில உபகரணங்களில் பக்டீரியா தாக்கங்கள்பரவுவதால் இவற்றைக்கட்டுப்படுத்த வைத்தியத்துறையில்பல லட்சம் ரூபா செலவாவதை தடுக்க இம்முறைவாய்ப்பாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளி உப்புடன் சில உலோகங்களை சேர்த்து தயாரிக்கும் வைத்திய உபகரணங்கள் மருத்துவமனை பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதால் பெருமளவு வைத்திய உபகரணங்களை வெள்ளியில் தயாரிக்கப்படும் பணியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. (ச)

# 'தமிழோசை' சங்கர் இவ்வாரம் வருகிறார்

(லண்டன்)

தமிழோசை திரு. சங்கர் மலேசியா சிறிலங்காவுக்கான ஒருவாரகால பயணத்தை இவ்வாரம் ஆரம்பிப்பார்.

இவரது விஜயத்துக்கான அட்டவணை ஒரு சில தினங்களில்தமிழோசை நிகழ்ச்சியில் தெரிவிக்கப்படுமென நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. பி. ஸி. தமிழோசையில் இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து செய்திகள் ஒலிபரப்பப்படுவதால் அவர் யாழ்ப்பாணத்துக்கு செல்ல அனுமதிக்கப்படுவாரா? என்பது இதுவரை தெரியவில்லை. (ச)

## வீட்டுத் தாழ்வாரங்கள் விறகுக்கு திருட்டு

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் பலரது வீட்டுத்தாழ்வாரங்கள் திருடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வீட்டுடன் இணைந்ததாக விறகுகளை சேமிக்கவும், கால்நடைகளை கட்டி வளர்க்கவும் அமைக்கப்பட்டிருந்த தாழ்வாரங்களை காணாமையால் வீடுகளைப் பார்க்கச் சென்ற பலரும் திகைப்படைந்தனர்.

தற்போது விறகுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் இத்தாழ்வாரங்களை பிரித்து அதிலிருந்த மரங்களை விறகுக்காக கொத்திஎடுத்துச்சென்று விற்பனை செய்வதாக தெரியவந்துள்ளது. (86)

நீர்வேலி

## கந்தசாமி கோவிலில் கந்தஷஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசாமி தேவஸ்தானம் ஸ்கந்தசஷ்டி உற்சவ விழா நாளை 19ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம் மாதம் 23ந் திகதி திருப்பெருந் திருவடிக் காட்சியும், 24ந் திகதி பிற்பகல் சூரசங்கார உற்சவமும் இடம்பெறவிருக்கிறது.

25ந் திகதி பகல் தீர்த்தோற்சவமும் பிற்பகல் கொடி இறக்கமும் இடம்பெறும் 26ந் திகதி மாலை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவிருக்கிறது. (153)

## நோயாளர் பாதிப்பு

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் சில ஊழியர்கள் கடமைக்கு நேரம் பிந்தியே வருவதாகவும், கடமையிலிருந்து நேரத்திற்கு முன்னரே சென்றுவிடுவதாகவும் பலத்த புகார் செய்யப்பட்டுள்ளது.

இவ் ஊழியர்களின் இவ்வாறான ஒழுங்கீனங்களால் இங்கு சிகிச்சைபெறும் நோயாளர்கள் பெரும் பாதிப்படைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (52)

## முதலுதவி சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

கட்டுடை சந்தியில் முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது கட்டுடை சன சமூக நிலையத்தில் முறைசாராக்கல்விப் பிரிவின் ஆதவில் நடாத்தப்பட்ட முதலுதவிப் பயிற்சி நெறியில்பயிற்சிபெற்றவர்கள் இதில் கடமையாற்றி வருகின்றார்கள்.

காலை எட்டுமணி முதல் மாலை ஆறு மணி வரை இந்த முதலுலவி சிகிச்சை நிலையம் இயங்கிவருகின்றது. (72)

## இலவச நிவாரணம் சிற்றூரவை கண்காணிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் ப. நோ. கூ. சங்கங்கள் இலவச பங்கீட்டு உணவுப்பொருட்களைப் பாவனையாளர்களுக்குத் துரிதமாக வழங்கிவருகின்றன.

இவ் இலவச பங்கீட்டு உணவுப்பொருட்கள் ஒழுங்காகவும் சரியாகவும் வழங்கப்படுகின்றனவா என்பதைஅவ்வப் பகுதி சிற்றூரவைகள் கண்காணித்து வருகின்றன. இப்பகுதிகளில் ஒழுங்கீனமானமுறையில் உணவுப்பங்கீட்டு அட்டைகளைப் பெற்றிருந்த பாவனையாளர்கள் பலர் சிற்றூரவைகளின் கண்காணிப்பில் சிக்கிக்கொண்டனர். (52)

## குண்டு வீச்சினால்

# ஸ்தம்பிக்கும் நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலை

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை விமானத்தாக்குதலால் சேதமடைந்து ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு முன்புறம் உள்ள 'கராஜ்' ஒன்றின்மீது சீனத்தயாரிப்பான வை-12 ரக விமானம் நேற்றுக் காலை வீசிய குண்டினால் அந்த கராஜ் முற்றாகச் சேதமடைந்தது.

இவ்வைத்தியசாலையின் 1ம், 2ம் வார்ட்டுக்கள், பிரேத அறை, 'எக்ஸ்ரே' அறை, ஆகியன சேதமடைந்தன.

# கோட்டக்கல்வி அலுவலகம் இடிந்து விழும் நிலையில்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகக் கட்டடத்தின் முன் பக்கம், பாரிய வெடிப்பு ஏற்பட்டு, இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளின் கோட்டக் கல்வி அலுவலகமாக விளங்கும் இக்கட்டடத்தின் அவல நிலைமை பற்றிக் கல்வித் திணைக்களம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (72)

## உயர்வகுப்பு மாணவர் வரவு குறைவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகள் இவ்வாரம் தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்கள் வரவு கணிசமான அளவு இருக்கக் காணப்பட்டபோதிலும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் உயர் வகுப்பு மாணவர்களின் வருகை மிகவும் குறைவாகவே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## சம்பளத்தை பெற ஏற்பாடு

[பண்டத்தரிப்பு]

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களின் செப்டம்பர் மாத சம்பளப்பணம் வழங்குவது தொடர்பாக யாழ் பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை கொழும்புசென்று சுகாதார அமைச்சு அதிகாரிகளை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

யாழ்ப்பாணத்திற்கு விரைவில் வந்து சேரவிருக்கும் 'லங்கா சிறி' என்ற கப்பலில் சம்பளப் பணத்தைக்கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகின்றது. [72]

## நேற்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொம்பர்கள் பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடுமையான குண்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

பின்னர் ஒன்றரை மணியளவில் இரு அவ்ரோ விமானங்கள் மயிலிட்டி, சுட்டுவன், தையிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் குண்டுகளைப் பொழிந்தன.

இலக்கு ஏதுமின்றி மக்கள் குடியிருப்புகளை நோக்கி குண்டுகள் பொழியப்பட்டதால் ஏராளமான வீடுகள் பாரிய சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் கூறினர்.

தெல்லிப்பழைக்கு அப்பால் செல்ல முடியாத அளவுக்கு ஹெலித்தாக்குதலும் ஷெல் தாக்குதலும் ஓயாது இடம்பெற்றது.

தையிட்டி, வீமன்காமம் போன்ற பகுதிகளில் இடம்பெயராமல் தொடர்ந்து வசித்து வந்தவர்கள் வெளியேறி வரமுடியாத அளவுக்கு அப்பகுதியில் சிக்கிக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்கின் பலபகுதிகளிலிருந்தும் வெளியேறி வரும் அகதிகள் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலில் தஞ்சமடைந்து வருவதால் அங்கு அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (86)

# உப தபாலதிபர்களாக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம், தபால் திணைக்களத் சிற்றூழியர்களில் இருந்து உதவித் தபாலதிபர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட பொதுப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து நான்கு சிற்றூழியர்கள் உதவித் தபாலதிபர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பிரதம தபாலகத்தில் தபால் சேவகர்களாகக் கடமையாற்றிய கந்தையா கேதீஸ்வரன், கந்தசாமி குகதாசன். கோப்பாய் தபாலகத்தைச் சேர்ந்த எஸ். தவலிங்கரத்தினம், தெல்லிப்பழை தபாலகத்தைச் சேர்ந்த எஸ்.பாலச்சந்திரன் ஆகியோர் உப தபாலதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து எட்டுத் தமிழர்கள் மட்டுமே இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (54)

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும், வீடுகளை திருத்துவதற்கும் இந்நிவாரணம் வழங்கப்படுமென அமைச்சர் உறுதியளித்தார். இதற்கு முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, (ச)

## வவனியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு இடமல்லாத காரணத்தினால் உடனடியாகத் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிவிடுகிறார்கள்.

வவுனியா நகரிலுள்ள பாடசாலைகளில் ஒரு சில பாடசாலைகள் மட்டும் இயங்குகின்றன. மாணவர் வரவு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. (153)

## இலங்கையர் வெளியேறத்தடை

(கொழும்பு)

குவைத்தில் வேலைசெய்யும் 30 ஆயிரம் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேறுவதற்கு வேலை வாங்கும் எசமானர்கள் தடை விதித்துவருவது தெரியவந்துள்ளது.

குவைத்தில் வீடுகளில் வேலைசெய்யும் இலங்கைப் பெண்களை, வீட்டின் உரிமையாளர்கள் இலங்கைக்குச் செல்வதற்குத் தடை விதித்துப் பலவந்தமாக வைத்திருப்பதாகவும், வேறு சிலர், தமது சொந்த விருப்பத்தின் பேரில் குவைத்தை விட்டு வெளியேறாது இருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது. (வி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.

## இலவச விதை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சுதேச பொருளாதாரவிருத்தியில் அக்கறையுள்ள தமிழீழ மக்களின் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவான பல செயற்பாடுகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது. அதற்கு முன்னோடியாக வீட்டுத்தோட்டங்கள் பெருந்தோட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடும் அனைவருக்கும் நியாயமான விலையில் விதைகள் விநியோகிக்கப்படும்.

சோளம். கொப்பி, வெண்டி பயிற்றை, பயறு, உழுந்து, விதைகளை கிராமிய உற்பத்திக் குழுக்கள், பிரதேச இணைப்பாளர்கள், மாணவர் அமைப்புத் தொண்டர்கள் மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

எனவே தரமான விதைகளை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் தவறாது மேற்படி அமைப்புக்களுடன் தொடர்புகொள்ளுமாறுகேட்கப்படுகின்றனர்.

## உலக உயிர் பாதுகாப்பு வாரம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் 'உலக உயிர் பாதுகாப்பு வாரம்' நாளை 19ந் திகதி முதல் இம்மாதம் 24ம் திகதி வரையும் கடைப்பிடிக்கப்படவிருக்கிறது.

குறித்த காலத்தில் சகல மக்களும் புலால் உண்ணாமையை மேற்கொண்டு செயற்படுமாறும் மேற்படி பேரவை கேட்டுள்ளது. [153]

## வைத்திய பரிசோதனை

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இப்பகுதியிலுள்ள அகதிகள் நலன்கருதி இலவச வைத்திய பரிசோதனை சிகிச்சை ஆகியவற்றை கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சித்தன்கேணியிலுள்ள கழக தொழிற்பயிற்சி கட்டிடத்தில் நடாத்தியது.

டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார், டாக்டர் எமில் அத்தனுசியார், டாக்டர் ரி. பகீரதன் ஆகியோர் அகதிகளைப் பரிசோதித்த சிகிச்சையளித்தனர். [72]

## 39 கிலோ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி பிரயாணி ஒரு பொதியில் 330 துண்டுகளை கொண்ட இத்தங்கத்தை மறைத்து வைத்திருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதன் பெறுமதி ஒரு கோடியே 40 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரயாணியும், இவரை வரவேற்க வந்த மூவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். (வி)

## பருத்தித்துறைக்கு

# உணவு, முத்திரையுடன் இன்று கப்பல் வருகிறது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு இன்று வரவிருக்கும் கப்பலில் 3000 தொன் உலர் உணவு, தபால் பொதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வருகின்றன.

யாழ். பிரதம தபால் அலுவத்திற்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளும், யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துவகைகளும் மேற்படி கப்பலில் கொண்டுவரப்படுவதாகத் தெரியவருகிறது. (153)

# 5 பாதைகளில் மரம் நடுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதான பாதைகளில் 'மரம் நாட்டும் திட்டம்' நடைபெறவிருக்கிறது'' என்று யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற மரம் நாட்டும் திட்டக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

''பலாலி வீதியில் வசாவிளான் வரையும், காங்கேசன்துறை வீதியில் மாவிட்டபுரம் வரையும். கண்டி வீதியில் இயக்கச்சி வரையும், மானிப்பாய் வீதியில் வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு வரையும், பருத்தித்துறை வீதி முழுவதும் வேம்பு, மலைவேம்பு, புளி, தேக்கு ஆகிய மரங்கள் நடவேண்டும் என்று தெரிவுசெய்துள்ளோம். இப்பகுதிகளின் பாதையில் 200 அடி வித்தியாசத்தில் மேற்படி மரங்களை நடவேண்டும்]''

''இத்திட்டம் வெற்றிபெற மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவை ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' என்றார். [153]

## நிவாரண அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

குருநகர் கிழக்கு ஜே/40 சொக்கலிங்கம் கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான 3ம் கட்ட உலர் உணவு நிவாரண அனுமதி அட்டைகள் 13ம் திகதிமுதல் வழங்கப்பட்டு வருகிறது.

20ம் திகதி வரைக்கும் இவ் நிவாரண அட்டைகள் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்தியால் குத்தி கொலை

[யாழ்ப்பாணம்]

கத்திக்குத்துக்கு இலக்காகிய சைக்கிள் வியாபாரி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

கண்டியைச் சேர்ந்த வி. சந்திரன் [வயது 20] என்பவரே தனது நண்பரால் கத்தியால் குத்தப்பட்டு மரணமானவராவார். [72]

## தென்னை நாற்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கையினைத் தமிழீழப் பிரதேசம் எங்கும் சீரான முறையில் மேற்கொள்ளத் தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற் கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விநியோகிக்கவெனத் தரமான தென்னை நாற்றுக்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

தங்கள் வளவுகளிலும், பெருந் தோட்டங்களிலும் தென்னைகளைப் பயிரிட ஆர்வம் உள்ள அனைவரும், தங்கள் கிராமத்தின் கிராமிய உற்பத்திக் குழுக்கள், பிரதேச இணைப்பாளர்கள் மூலமாக நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மூன்று வருடங்களில் பயன் தரவல்ல இனம் 15 ரூபாவாகவும், ஐந்து வருடங்களில் பயன்தரக்கூடியது 12 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்களைக் கிராமிய உற்பத்திக் குழு, பிரதேச இணைப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விமான நிலையத்தில் கடத்தல் முறியடிப்பு

[நீர்கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இரு கடத்தல் முயற்சிகள் சுங்க அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டது.

பெண்மணி ஒருவர் 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களையும், 2 ஆயிரம் சிங்கப்பூர் டொலர்களையும் சிங்கப்பூருக்கு கடத்த முற்பட்டபோது, சுங்க அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

10 லட்சம் பெறுமதியான போதைவஸ்தை இலங்கைக்குள் ஒருவர் கடத்திவர முற்பட்ட வெளிநாட்டவர் ஒருவரும் பிடிபட்டார்.

இவரிடம் இருந்து கிடைக்கப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து கொழும்பின் வெளிப்புறப் பகுதிகளில் உள்ள பல வீடுகளை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதில்பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை ஆரம்பித்த மோதல் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்து இடம்பெற்றுவருகிறது. (86)

## கொழும்பிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவை காலை 6-45 க்கு கொழும்பிலிருந்து பொத்துவிலுக்கும், பொத்துவிலிலிருந்து கொழும்புக்கும் நடாத்தப்பட்டுவருகின்றது. இச்சேவை முன்னர் நடைபெற்றதாயினும் 8 மாத காலமாகத் தடைப்பட்டிருந்தது. (ச)

## அதிபர் பதவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களுக்கும் முதலாந்தரம், இரண்டாம் தர அதிபர்களுக்கு நியமனக் கடிதங்களைக் கல்விச் சேவை ஆணைக்குழு ஏற்கனவே வழங்கியுள்ளது.

எனினும் அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர், விபரங்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)